**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 67/2020 |
| Name | : Roselin Anthoniammal |
| P.W. | : 8 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**10.07.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**சாட்சி Micro soft teams செயலி வாயிலாக ஆஜரான பின்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் சைபர் கிரைம் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.11.2019 ம் தேதி நான் கொமரலிங்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண் 250/2019 இதச பிரிவுகள் 294(b), 324, 506(i) ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்குக் கோப்பை பெற்று 04.11.2019 ம் தேதி மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரங்கநாதன் மற்றும் சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் கண்ணன், சரோஜா, குணசேகரன், மயில்சாமி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகளை 04.11.2019 ம் தேதி கைது செய்து பின்னர் நிலைய பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சை அளித்த உடுமலை அரசு மருத்துவமனை

மருத்துவர் திரு.சிவபிரபு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றேன். காயச் சான்று ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணை முடித்து 28.11.2019 ம் தேதி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(i) ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்கில் கண்ணன் என்பவர் புகார் கொடுத்தார். புகார் அவரால் எழுதப்பட்டதா என்றால் இல்லை வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை 04.11.2019 ம் தேதி காலை 09.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் 03.11.2019 ம் தேதி காலை 08.00 மணிக்கு நடைபெற்றது. சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளிற்கும் ஒரு நாள் தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் காயம்பட்டவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தகவல் பெற்று வாக்குமூலம் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனையில் இருந்து 03.11.2019 ம் தேதி காலை 11.10 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாக இண்டிமேசன் கிடைத்தது. இண்டிமேசன் கிடைத்த நேரம் சரியாக ஞாபகம் இல்லை.

(2) சம்பவ இடத்தை 04.11.2019 ம் தேதி காலை 11.00 மணிக்கு சென்று பார்த்தேன். சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரணை செய்தேன். பட்டியல் சாட்சிகள் புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் வயல் என்றால் சரிதான். சம்பவம் யாருடைய இடத்தில் நடந்தது என்றால் பொன்னிகட்டுத் துறை செல்லும் சாலையில் வயலுக்கு அருகில் நடந்தது. மாதிரி வரைபடத்தில் குமரவேல் வயல் வரப்பில் சம்பவம் நடந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வயலுக்கும், ரோட்டிற்கும் உள்ள இடைவெளியில் காட்டப்பட்டுள்ளது.

(3) வழக்குச் சம்மந்தமாக பொட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. காயம்பட்டவருக்கு சாதாரண காயம் ஏற்பட்டுள்ளது. நான் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றும், கொடுக்கப்பட்ட பொய்யான புகாரைப் பெற்று சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. இவ்வழக்கில் 28.11.2019 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 6 மாத காலம் தாமதமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய காரணம் உண்டா என்றால் காயச் சான்றிதழ் பெறப்பட்ட உடன் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். உண்மையில் இது போல் சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றும் பொய்யான வழக்கு என்பதால் தாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.10 18:13:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்